Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)

Memenuhi segala keperluan bekalan air anda

*Meeting all your water supply needs*

9 ஜனவரி 2024

**ஊடக வெளியீடு**

**IR. பத்மநாதன் K.**
PBAHB மற்றும் PBAPP தலைமை நிர்வாக அதிகாரி

**PBAPP ஜனவரி 2024 நாளை திட்டமிடப்பட்ட நீர் விநியோகத் தடையை (SWSI) எதிர்கொள்ள முழுமையான தயார்நிலையில் உள்ளது**

**அனைத்து கருவிகள், உபகரணங்கள் மற்றும் கனரக இயந்திரங்கள் சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையம் (WTP) மற்றும் பிற வேலை இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.**

- **சுங்கை டுவா WTP இல் சுத்திகரிக்கப்பட்ட நீரை பம்ப் செய்யும் பணிகள் நாளை (10.1.2024) காலை 6.00 மணி முதல் நிறுத்தப்படும். பாதிக்கப்பட்ட அனைத்து பயனீட்டாளர்களும் பயன்பாட்டிற்காகத் தண்ணீரை சேமித்து வைக்குமாறு நினைவூட்டப்படுகிறார்கள்.**

- **சுமார் 1300 PBAPP பணியாளர்கள் 12.1.2024 முதல் 14.1.2024 வரை 4 நிலைகளில் நீர் விநியோக சேவைகளை மீட்டெடுக்க 24 மணி நேர அடிப்படையில் திட்டமிட்டு பணிப்புரிவார்கள்.**

- **முகநூலில் அண்மைய நிலவரங்கள் பதிவிடப்படும்.**

**பினாங்கு, செவ்வாய், 9 ஜனவரி 2024:** பினாங்கு நீர் விநியோக வாரியம் சென் பெர்ஹாட் (PBAPP) பினாங்கின் மிகப் பெரிய மற்றும் மிக முக்கியமான சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தை (WTP) நாளை (10.1.2024) காலை 6.00 மணி முதல் தற்காலிகமாக நிறுத்துவதற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகள் தயார்நிலையில் உள்ளது.

இந்த பணிநிறுத்தம் செபராங் பிறை மற்றும் பினாங்கு தீவில் உள்ள சுமார் 590,000 பயனீட்டாளர்களைப் பாதிக்கும். இதன் மூலம் திட்டமிடப்பட்ட நீர் விநியோகத் தடையினால் (SWSI) பாதிக்கப்படும் அனைத்து பயனீட்டாளர்களும் பயன்பாட்டிற்காக தண்ணீரை சேமித்து வைக்குமாறு நினைவூட்டப்படுகிறார்கள்.

8.12.2023 அன்று முதல் பொது அறிவிப்பின் மூலம் PBAPP பாதிக்கப்பட்ட பகுதிகளின் பட்டியல் மற்றும் வரைப்படத்தை வெளியிட்டு வருகிறது:

- PBAPP இன் முகநூல் மற்றும் இணையதளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள பயனீட்டாளர்களுக்கும் பிரச்சூரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தித்தாள்களில் விளம்பரங்கள்

வெளியிடப்பட்டுள்ளன.

10.1.2024 அன்று காலை 6.00 மணிக்குத் தொடங்கும் என திட்டமிடப்பட்ட 96 மணி நேர காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் செயல்பாடு குறித்து பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகிறது.
மேலும் PBAPP இன் திட்டமிட்ட நீர் விநியோகத்தை 4 நிலைகளில் மீட்டெடுக்கிறது:

| *நாள்/ நேரம்* | *பணி மற்றும் திட்டங்களின் அடைவுநிலை* | |
|---|---|---|
| **முதல் 24 மணிநேரம்:**<br>6.00am, 10.1.2024 – 6.00am, 11.1.2024 | • சுங்கை டுவாவில் 2 கட்டுப்பாட்டு வால்வுகளில் ஏற்படும் கசிவை (1.2 மீ விட்டம்) மாற்றுவதற்கான பணிகள் நிறைவு<br>• மற்ற 22 இடங்களில் நீர்நிலைகள் மற்றும் முன் தடுப்பு பராமரிப்புத் திட்டங்களை முடித்தல். | |
| | மீட்சி நிலை | நீர் விநியோக சேவைக்கான மீட்சி திட்டம் |
| **48 மணிநேர குறிப்பு:**<br>6.00am 12.1.2024 | 1 | பட்டர்வொர்த் மற்றும் பிறை தொழில்துறை பகுதிகளில் உள்ள உள்நாட்டு அல்லாத பயனீட்டாளர் உட்பட, செபராங் பிறையில் **197,025 பயனீட்டாளர்கள் (பாதிக்கப்பட்ட பயனீட்டாளரில் 33%) பயன்பெறுவர்.** |
| **72 மணிநேர குறிப்பு:**<br>6.00am, 13.1.2024 | 2 | ஜார்ச்டவுன் மற்றும் பாயான் லெப்பாஸ் தொழிற்பேட்டையில் உள்ள உள்நாட்டு அல்லாத பயனீட்டாளர் உட்பட பினாங்கு தீவு மற்றும் செபராங் பிறை ஆகியவற்றில் **495,065 பயனீட்டாளர்களில் (பாதிக்கப்பட்ட 590,000 நுகர்வோரில் 84%)** பயன்பெறுவர். |
| **96 மணிநேர குறிப்பு:**<br>6.00am, 14.1.2024 | 3 | **பாதிக்கப்பட்ட 99.5% பயனீட்டாளர்கள் பயன்பெறுவர்.** |
| | 4 | மீதமுள்ள 0.5% பாதிக்கப்பட்ட இறுதி வரிசை பயனீட்டாளர்கள் (EoL) மற்றும் உயர்தர சுற்றுப்புறங்களில் உள்ளவர்கள் பயன்பெறுவர். |

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)

Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

PBAPP 27 "ஜம்போ தொட்டிகள்" (அதிகபட்ச கொள்ளளவு 40,000லிட்டர்) உட்பட 99 நீர் தொட்டிகளைக் கொண்டு, பாதிக்கப்பட்ட பயனீட்டாளருக்கு நீரை விநியோகிக்கும். இந்தத் தொட்டிகள் 4 மீட்சி நிலைகளிலும் பயன்படுத்தப்படும்.

இந்தத் தொட்டிகள் 97 தண்ணீர் தொட்டிகள் உட்பட (ஒவ்வொன்றும் **24,000 லிட்டர்** நீர் வரை சேமிக்கக்கூடிய 19 “Gajah Flexitanks உட்பட) மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய நூற்றுக்கணக்கான தொட்டிகளிலும் நீர் நிரப்பப்பட்டு மீண்டும் முடியும் போது மறுமுறை நிரப்பப்படும்.

**PBAPP முக்கிய முன்னேற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்**

- **அனைத்து உபகரணங்கள், கருவிகள் மற்றும் கனரக இயந்திரங்கள் சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையம்** (WTP) **மற்றும் பிற வேலை இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. பணியைத் தொடங்க குழுக்கள் தயார் நிலையில் உள்ளன.**

- 99 **தொட்டிகள் நிரப்பப்பட்டு ஒரு நாளைக்கு** 1.85 **மில்லியன் லிட்டர் தண்ணீர்** (MLD) **வழங்க தயாராக உள்ளது**

- **அனைத்து** PBAPP **தண்ணீர் தொட்டிகளும் முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.**

- **சுமார்** 1300 PBAPP **பணியாளர்கள்** 12.1.2024 **முதல்** 14.1.2024 **வரை** 4 **நிலைகளில் நீர் விநியோக சேவைகளை மீட்டெடுக்க** 24 **மணி நேர அடிப்படையில் திட்டமிட்டு பணிப்புரிவார்கள்.**

- **ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் உடனடியாகப் பதிலளிப்பதற்காக** PBAPP **இன் அவசரகாலப் பதிலளிப்புக் குழு செயல்பாட்டில் இருக்கும்.**

- **இன்று** (9.1.2024) **மாலை** 6.00 **மணிக்கு சுங்கை டுவா** WTP-**க்கு பினாங்கு முதலமைச்சர் சாவ் கொன் இயோவ் பணியிட ஏற்பாடுகளைக் கண்காணிக்க வருகை அளிப்பார்.**

- **ஒரு நாளைக்கு** 3 **முகநூல் பதிவுகள் மூலம், வேலையின் முன்னேற்றம் மற்றும் நீர் விநியோக சேவைகளின் மீட்சி குறித்து பயனீட்டாளருக்கு அறிவிக்கப்படும்.**

- **முக்கியமான தகவல்களை வழங்க, முக்கிய ஊடக வெளியீடுகளும் வெளியிடப்படும்.**

- PBAPP**யின்** 24-**மணி நேர அழைப்பு மையத்தின் (தொலைபேசி எண்.** 04

255 8 255) **அதிக அளவிலான அழைப்புகளுக்குத் தீர்வுகாண அதிகமானோர் பணியில் அமர்த்தப்படுவர்**.

**PBAPP அனைத்து அவசரமான நீர்நிலைத் திட்டங்களையும், திட்டமிட்டப்படி நீர் விநியோக சேவைகளை மீட்டெடுக்கும் சவாலையும் ஏற்கத் தயாராக உள்ளது. வேலையை செய்து முடிப்போம். பினாங்கில் உள்ள அனைத்து நீர் பயனீட்டாளர்களின் அன்பான புரிதலையும் ஒத்துழைப்பையும் பெரிதும் எதிர்பார்க்கிறோம்**.

**நன்றி.**

---

எழுத்தாக்கம் : Puan Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவி

மின்னஞ்சல் : syarifah@pba.com.my